# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 14.06.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் பக்கராவின் 112, 113 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

وَقَالُوا لَنْ يَدْخُلَ الْجَنَّةَ إِلَّا مَنْ كَانَ هُودًا أَوْ نَصَارَىٰ ۗ تِلْكَ أَمَانِيُّهُمْ ۗ
قُلْ هَاتُوا بُرْهَانَكُمْ إِنْ كُنْتُمْ صَادِقِينَ ﴿١١٢﴾

بَلَىٰ مَنْ أَسْلَمَ وَجْهَهُ لِلَّهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهُ أَجْرُهُ عِنْدَ رَبِّهِ
وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ﴿١١٣﴾

*பொருள்: யூதர்களாகவோ, கிறித்தவர்களாகவோ இருப்பவர்களைத் தவிர வேறெவரும் சுவர்க்கத்தில் ஒருபோதும் புகமாட்டார் என்று அவர்கள் கூறுகின்றனர். இவை அவர்களுடைய வீண் ஆசைகளேயாகும். நீங்கள் உண்மையாளர்களாயின் உங்களுடைய (வாதத்திற்குரிய) சான்றைக் கொண்டு வாருங்கள் என நீர் (அவர்களிடம்) கூறுக.*

*அவ்வாறன்று எவர் தம்மை அல்லாஹ்விடம் முழுமையாக ஒப்படைத்து நற்செயல் செய்பவராயும் விளங்குகிறாரோ அவருக்குரிய நற்கூலி அவருடைய இறைவனிடத்தில் உண்டு. அவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எவ்வித அச்சமும் இருக்காது. (இறந்த காலம் பற்றி) அவர்கள் துயரமும் அடையமாட்டார்கள். (2:112,113)*

கடந்த நாட்களில் எனக்கு ஒருவர் கடிதம் எழுதினார். பாகிஸ்தானில் இப்போது புதிய அரசு பொறுப்பேற்றுள்ளது. கடந்த அரசாங்கம் செய்ததையே அஹ்மதிகளுக்கு இந்த அரசும் செய்யும் என்று கூறியுள்ளார். ஒரு அமைச்சரின் பெயரைக் குறிப்பிட்டு இவர் முன்பும் அஹ்மதிகளுடன் நல்ல முறையில் நடந்து கொண்டதில்லை. மீண்டும் அதே நிலை தான் நீடிக்கும் என்றும் கூறி அக்கடிதத்தை எழுதியவர் அதில் தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

என்ன நடக்கும் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால் இந்த அரசாக இருந்தாலும் சரி, வேறு எந்த அரசாக இருந்தாலும் சரி பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிராக அநீதியை மட்டுமே கொண்ட ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. பாகிஸ்தானைச் சேர்ந்த அஹ்மதிகளுக்கு எப்போதும் உள்ள ஒரு நிரந்தரமான கவலை இதுவாகும். இதனால் பாகிஸ்தானின் அஹ்மதிகள் குறிப்பாக துஆவின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். நாம் உலக அரசுகளிடமிருந்து எதையாவது பெற வேண்டுமென்றால் பிறகு இவ்வாறான சிந்தனையும் கவலையும் கொள்ளலாம். ஆனால் நமது எல்லா நம்பிக்கையும் இறைவனை மட்டுமே சார்ந்துள்ளது. நிச்சயமாக இறைவனையே நாம் முழுவதுமாக சார்ந்துள்ளோம். எனவே நமக்கு இவ்வாறான கவலையும் எதிர்பார்ப்புகளும் அவசியமில்லாததாகும். இன்னார் ஆட்சிக்கு வந்தால் நமது நிலை மேம்பட்டு விடும் அல்லது இன்ன நபர் ஆட்சிக்கு வந்தால் சீராகி விடும் என்ற எண்ணமே நமக்கு தேவையற்றதாகும். நாம் அல்லாஹ்வைச் சார்ந்திருக்கிறோம். எனவே நமக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்கும் என்றால், இதைப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டிய தேவையில்லை.

இந்த உலக அரசுகள் உலக ரீதியாக தாம் விரும்புவதைச் செய்யட்டும். கடந்த காலத்தில் ஏறக்குறைய இந்த சம்பவம் அஹ்மதிகளுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 38 வருடங்களாக இவற்றை செய்து வருகின்றது. இதற்கு முன்பும் இதைத் தான் செய்து வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலிருந்தே எதிர்ப்பு நீடிக்கிறது. அச்சமயத்தில் அரசாங்க ரீதியாக இல்லா விட்டாலும் அரசாங்க ஊழியர்கள் எதிரிகளுடன் இணைந்து அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக அல்லது அஹ்மதிகளுக்கு எதிராக சில அஹ்மதி நபர்களுக்கு எதிராக திட்டங்களைத் தீட்டிக் கொண்டு தான் இருந்தனர்.

எவ்வாறிருப்பினும், ஒரு குறிப்பிட்ட கொள்கையைக் கொண்ட அரசாக இருந்தாலும் அல்லது பிற அரசுகளாக இருந்தாலும் இவர்கள் தமது கொள்கையின்படி அஹ்மதிகளை இஸ்லாத்தின் வட்டத்தை விட்டு வெளியேற்றி வைத்துள்ளனர். நமக்கு எதிராக முல்லாக்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்து வைத்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அநீதியும் வரம்புமீறலும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. எனவே இந்த உலக அரசுகளிடம் நாம் எந்த நன்மையையும் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை; எதிர்பார்க்கவும் கூடாது. மேலும் இஸ்லாத்தின் வட்டத்தில் நாம் இணைந்திருக்கிறோம் என்பதற்கு நமக்கு இவர்களுடைய சான்றிதழ் தேவையில்லை. உண்மையான முஸ்லிம் என்பவர் இறைவனின் பார்வையில் முஸ்லிம் ஆக இருப்பவரே ஆவார்.

உண்மையான முஸ்லிம் என்பவர், நான் இறைவனின் ஏகத்துவத்தின் மீது நம்பிக்கை கொள்கிறேன் என்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறுதி சரீஅத்தைக் கொண்டு வந்த நபி ஆவார்கள் என்றும் நம்பிக்கை கொள்கிறேன் என்று அறிவிப்பு செய்பவரே ஆவார். இந்த விளக்கத்தின் அடிப்படையில் அஹ்மதிகள் முஸ்லிம்கள் ஆவர். செயல்பூர்வமாகவும் நம்பிக்கை பூர்வமாகவும் பிறரை விட மேன்மையுடைய முஸ்லிம்கள் ஆவர். எனவே இந்த அறிவிப்பை செய்த பின் வலுக்கட்டாயமாக நம்மை முஸ்லிம்கள் அல்ல என்று கூறி விட்டு, சட்டத்தின்படி முஸ்லிம்களாக இருக்கக்கூடிய இவர்கள் என்ன செய்தாலும் அல்லது இவர்கள் இயற்றிய சட்டத்தின் பார்வையில் முஸ்லிமாக இருப்பவர்கள் என்ன அநியாயம் செய்தாலும் அல்லது அரசாங்கமும், அரசு ஊழியர்களும் அநியாயம் செய்தாலும் இவர்கள் அல்லாஹ்வின் பார்வையில் பாவிகளாக விளங்குகின்றனர். மேலும் அவ்வாறு செய்வதால் இவர்கள் நம்மை இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டு வருகின்றனர். இவர்களுடைய இந்த செயல்கள் நிச்சயமாக நம்மை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதாக அமைய வேண்டும். ஒவ்வொரு அஹ்மதிக்கும் இந்த உணர்வு இருக்க வேண்டும்.

இறைவனுடன் ஏற்படும் இந்த நெருக்கம் மற்றும் இந்த நெருக்கத்தில் இன்னும் முன்னேறுதல் ஆகியவையே இறை ஜமாஅத்துகளின் சிறப்பம்சமாகும்; சிறப்பாக இருக்கவும் வேண்டும். இங்கு நான் சட்டத்தின் பார்வையில் முஸ்லிம்கள் என்ற சொல்லை பயன்படுத்தினேன். இதைப் பற்றி முழுமையாகத் தெரியாதவர்களுக்கு நான் கூறுகிறேன். பாகிஸ்தானின் சட்டம் அஹ்மதிகள் சட்டத்தின் நோக்கங்களுக்காக முஸ்லிம்கள் அல்ல என்று கூறுகிறது. இது வியக்க வைக்கும் ஒரு பதமாகும். குடியரசு ஆட்சி நடத்தி வருவதாக கூறும் ஒரு நாடு மார்க்கத்தைப் பற்றி தீர்ப்பு கொடுப்பது முட்டாள்தனமான ஒன்றாகும். எவ்வாறிருப்பினும், 1974-ல் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு இராணுவ ஆட்சி நடத்தியவர் இந்த சட்டத்தில் இன்னும் பல கடுமைகளைக் கொண்டு வந்தார். இப்போது நான் இதன் விளக்கத்திற்குச் செல்ல மாட்டேன்.

எவ்வாறிருப்பினும், சட்டத்தின் அடிப்படையில் அஹ்மதிகள் முஸ்லிம் அல்லாதவர்களாவர். உலகில் இஸ்லாத்தின் சரியான வடிவத்தை அஹ்மதிகள் தான் எடுத்துக் காட்டுகின்றனர் என்ற போதிலும் அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்ல. ஆனால் அஹ்மதி அல்லாத பாகிஸ்தானின் குடிமக்கள் சட்டத்தின் பார்வையில் முஸ்லிம்கள் ஆவர். இவர்களின் பெரும்பாலான அமைப்பினர் இஸ்லாத்தை தவறான வடிவமாக உலகிற்கு எடுத்துக்காட்டி இஸ்லாத்தை இழிவுபடுத்துகின்றனர். இருப்பினும் இவர்கள் முஸ்லிம்களாவர்.

உலகில் பலர் என்னிடம் கேட்கின்றனர். அமெரிக்கா மற்றும் கனடாவின் எனது சமீபத்திய சுற்றுப் பயணத்திலும் எல்லா இடங்களிலும் பத்திரிகையாளர்கள் என்னிடம் கேட்டனர். நான் ஏற்கனவே இதைக் கூறியுள்ளேன். நீங்கள் இஸ்லாத்தை எடுத்துக் கூறுகின்றீர்கள். அது சரி தான். ஆனால் முஸ்லிம்களின் பெரும்பான்மை உங்களை முஸ்லிம் என்று ஏற்றுக் கொள்வதில்லையே? அவர்கள் செய்கின்ற செயல்களின் விளைவு நீங்கள் எடுத்துரைக்கும் போதனைக்கு நேர் மாற்றமாக இருக்கிறதே? என்று கேட்கின்றனர். மேலும் அஹ்மதிகள் உலகில் சரியான இஸ்லாமிய புரட்சியைக் கொண்டு வருவார்கள் என்றும் நீங்கள் வாதம் புரிகின்றீர்கள். இது எவ்வாறு நிகழும்? என்றும் கேட்கின்றனர். இதற்கு நான் அவர்களிடம் இது நடக்கும் என்பதல்ல. இது நடந்து வருகிறது என்றே கூறுகிறேன். இலட்சக்கணக்கான நல்ல உள்ளம் படைத்த முஸ்லிம்கள் இந்த உண்மையான இஸ்லாத்தை புரிந்து கொண்டு ஒவ்வொரு வருடமும் அஹ்மதிய்யத்தில் வந்து இணைகின்றனர். இந்த உண்மை இஸ்லாத்தில் இணைகின்றனர். இன்சா அல்லாஹ். உலகில் இஸ்லாம் ஒரு அமைதி நிறைந்த மார்க்கமாகும். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஈடிணையற்ற அமைதியின் தூதுவர் ஆவார்கள் என்று உலகை ஏற்றுக் கொள்ள வைக்கும் வரை இந்த பணியைச் செய்து கொண்டே செல்வோம். அந்த மாநபியின் கொடியின் கீழ் உலகிற்கு இரட்சிப்பு உள்ளது. உலகை ஏற்றுக் கொள்ளச் செய்வோம்.

ஒருவருடைய மதத்தைப் பற்றி தீர்ப்பு வழங்குவது அல்லது ஒருவர் இன்ன மதத்தைச் சேர்ந்தவர் அல்லது சேராதவர் என்ற தீர்மானத்திற்கு வருவது வேறொரு நபருடைய பணியல்ல. மனிதன் தான் எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்ற முடிவை அவன் சுயமாக எடுக்கிறான். தீவிரவாதத்தை விரும்பும் அரசாங்கம் அல்லது முல்லாக்கள் நம்மை முஸ்லிம்கள் என்று நம்பினாலும் நம்பா விட்டாலும் நமக்கு எந்த வித்தியாசமும் ஏற்படப் போவதில்லை. நான் முஸ்லிம் ஆவேன். அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட அனைவரும் முஸ்லிம் ஆவர். அது மட்டுமல்ல. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாதவர்களை விட சிறந்த முஸ்லிம் ஆவர். இவ்வாறே ஒவ்வொரு அஹ்மதியும் நம்புகிறார். இவ்வாறான செயல்களைச் செய்வதன் மூலம் இவர்களால் அஹ்மதிய்யத்தை ஒன்றும் செய்து விட முடியாது. ஆம்! ஒரு அரசாங்கம் அல்லது அதன் அமைச்சர் அல்லது அவர்களின் சீடர்கள் அஹ்மதிகளின் மீது அநீதி இழைத்தால் உலகில் அவர்கள் தம் அரசையும் தம் நாட்டையும் இழிவுபடுத்துபவர். அரசாங்கத்தை இழிவுபடுத்துவதால் நமக்கு ஒன்றும் இல்லை. ஒரு பாகிஸ்தானிய குடிமகன் என்ற அடிப்படையில் நிச்சயமாக வெட்கம் ஏற்படுகிறது. ஆனால் நாடு இழிவடையும் போது ஒவ்வொரு அஹ்மதியின் உள்ளமும் வேதனை அடைகிறது. ஏனெனில் இந்த நாட்டிற்காக நாங்கள் பல தியாகங்களைச் செய்துள்ளோம். இங்கு மார்க்கத்தின் பெயரால் இரத்தம் சிந்தி இவர்கள் நாட்டை இழிவடையச் செய்வது மட்டுமின்றி இங்கு நடக்கும் எல்லா அநீதிகளும் இஸ்லாத்தின் பெயரால் நடக்கிறது. ஆனால் இஸ்லாம் சாந்தி, சமாதானம், சகோதரத்துவம் மற்றும் அன்பு ஆகியவற்றைக் கொண்ட மார்க்கமாகும். இதையும் இழிவடையச் செய்கின்றனர். எதிரிகளுடனும் சிறந்த முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற நிலை வரும்போது நீதி எல்லா நிலையிலும் முதன்மையானதாகும்.

وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ عَلٰۤى اَلَّا تَعْدِلُوْا ؕ اِعْدِلُوْا

هُوَ اَقْرَبُ لِلتَّقْوٰى ۖ وَاتَّقُوا اللّٰهَ ؕ

என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். *அதாவது ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை அநீதி இழைக்குமாறு தூண்ட வேண்டாம். நீதியை நிலைநாட்டுங்கள். இது இறையச்சத்திற்கு மிகவும் நெருங்கியதாகும். இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் (5:9)* என்று அல்லாஹ் கூறுகின்றான். இதுவே இஸ்லாத்தின் போதனையாகும்.

இஸ்லாத்தின் எதிரிகள் ஆட்சேபனை செய்யும் போது நாம் இந்த போதனைகளை எடுத்துக்கூறி அவர்களின் வாயை அடைக்கிறோம். திருக்குர்ஆனின் அழகிய போதனைகளை எடுத்துக்கூறி அவர்களுக்கு

பதில் தருகிறோம். உண்மையான முஸ்லிம் அல்லாஹ்வின் அச்சத்தையும் அவனது விருப்பத்தையும் குறிக்கோளாகக் கொள்கிறார். ஒரு உண்மையான முஸ்லிம் அநீதி மற்றும் அக்கிரமம் செய்யும் கருத்துக்களை பேசவே மாட்டார். ஆனால் இங்கு பிரச்சனை யாதெனில் சமுதாயம் யாரை பின்பற்றுகிறதோ அவர்களிடம் இறையச்சம் இல்லை. இறையச்சம் இல்லை என்னும் போது அநீதி, அக்கிரமம் ஆகியவற்றைத் தவிர வேறெதையும் அவர்களிடம் எதிர்பார்க்கவே முடியாது.

இங்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் U.K-வில் ஜமாஅத் நிறுவப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவேறியதை ஒட்டி, U.K. Parliment House -ல் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் 42 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் Deputy Prime Minister அவர்களும் வந்திருந்தார். ஆறு அமைச்சர்களும் வந்தனர். பிற Diplomats 20 பேரும் இன்னும் படித்த மக்களும் பலர் வந்திருந்தனர். அவர்களின் முன்னிலையில் நான் இஸ்லாத்தின் அழகிய போதனை மற்றும் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் ஒளியில் உண்மையான இஸ்லாம் என்றால் என்ன? என்று எடுத்துரைத்தேன். இதைக் கேட்ட அனைவரும் நீங்கள் எப்போதும் இதைத்தான் உங்களது சொற்பொழிவில் எடுத்துக் கூறி வருகிறீர்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் எப்போதும் அமைதி மற்றும் சமாதானத்தின் கருத்துக்களையே பேசி வருகிறது. ஆனால் பிற முஸ்லிம் அமைப்புகள் செய்து வருவது என்ன? இந்தக் கருத்தை சில அரசியல் தலைவர்கள் வெளிப்படையாகக் கூறி விடுகின்றனர். ஆனால் சில அரசியல் காரணங்களினால் சிலர் பயந்து பயந்து பேசுகின்றனர். ஆனால் எவ்வாறிருப்பினும், நான் திருக்குர்ஆன் மற்றும் ரஸுல் (ஸல்) அவர்களின் சம்பவங்களை எடுத்துக் கூறி பேசும் போது இஸ்லாத்தின் அசல் போதனை என்ன என்பது மக்களுக்கு தெரிந்து விடுகின்றது. சிலர் நல்ல தாக்கத்திற்கு ஆளாகின்றனர்.

ஒரு நாட்டின் தூதுவர் என்னிடம் கூறினார். இது நேற்று அல்லது நேற்றைய முன் தினம் நடந்த சம்பவமாகும். அவர் கூறினார்: நீங்கள் திருக்குர்ஆனின் வசனங்களை மேற்கோள் காட்டி பேசிய ஒவ்வொரு சொல்லும் எனது உள்ளத்தைச் சென்றடைந்தது என்றார். இவர் ஒரு கிறிஸ்தவர் ஆவார். இவர் எனது நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் வந்து கலந்து கொள்வார். எனவே சகஜமாக பழகக்கூடியவர் ஆவார். அவரிடம் நான் இந்த கருத்துக்களை உங்களுடைய உள்ளத்தில் பதிய வைப்பதற்காக மட்டும் எடுத்துரைக்கவில்லை. இந்தக் கருத்துக்களை நீங்கள் உங்களுடைய வட்டாரத்தில் பரப்பவும் வேண்டும் என்றேன். அதற்கு அவர், நான் பரப்பி வருகிறேன். வரும் காலத்திலும் பரப்பி வருவேன் என்றார். அந்நியர்களின் உள்ளத்தில் நல்ல விளைவு ஏற்படுகிறது. ஆனால் கல் நெஞ்சம் படைத்த மவ்லவிகள் இந்த தூதுச் செய்தியை நமது நாவினால் கேட்டும் அவர்களது உள்ளங்கள் மேலும் கல்லாகிக் கொண்டே செல்கிறது.

நம்மைப் பொருத்தவரை இஸ்லாத்தைப் பற்றி தவறான கருத்துக்களைக் கூறுபவர்களின் கூற்றுக்களையும் அதன் விளைவுகளையும் நாம் போக்கி வருகிறோம். இந்தப் பணி நம்மைச் சேர்ந்ததாகும். இஸ்லாத்தின் அழகை உலகிற்கு காட்ட வேண்டியது நமது பணியாகும். எனவே நாம் இந்த வேலையை இன்சா அல்லாஹ் செய்து கொண்டே இருப்போம். ஆனால் இஸ்லாமிய நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதிகள் மற்றும் சில படித்த மக்கள் முல்லாக்களை பின்பற்றி அஹ்மதிகளின் மீது இஸ்லாத்தின் பெயரால் அநீதியிழைக்கின்றனர். இது இவர்களின் பணியாகும். நாம் நமது பணிகைளைச் செய்து கொண்டே செல்வது போல் அவர்கள் தமது பணியை செய்து கொண்டே செல்வார்கள். இதைப் பற்றி நாம் கவலைப்படக் கூடாது. நான் ஏற்கனவே கூறியது போன்று இவர்களிடம் நாம் எதையும் எதிர்பார்க்கவும் இல்லை. இவர்கள் நீதியுடன் அரசாங்கம் நடத்தினால், அநீதியைத் தடுத்தால் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்றுக் கொண்டு அதன் நற்கூலிக்கு உரியவர்களாக இருப்பார்கள். இல்லையென்றால் நமது இறைவன் நம்முடன் இருக்கின்றான். அவனே நமக்கு ஆறுதல் வழங்குபவன் ஆவான். ஆறுதல் வழங்கிக் கொண்டும் இருக்கிறான். பாதுகாக்கவும் செய்கிறான். இல்லையென்றால் நான் முன்னதாக பலமுறை கூறியுள்ளேன். இவர்களின் தீய சூழ்ச்சிகள் மிகவும் அபாயகரமானதாகும்.

இவ்வுலகிலும் அல்லாஹுத்தஆலா தன் வாக்குறுதிக்கேற்ப வழங்குவான். மறுமையிலும் வழங்குவான் இன்சா அல்லாஹ். ஆனால் அநீதியிழைப்பவர்களை பிடிக்கவும் செய்வான். நிச்சயமாக பிடிப்பான் இன்சா

அல்லாஹ். எனவே நாம் உலக அரசாங்கங்களைப் பார்ப்பதற்குப் பதிலாக இறைவனின் பக்கமே பார்ப்பது அவசியமாகும். இறைவனின் முகத்தைப் பார்த்தவாறு அவனது கட்டளைகளின்படி வழிநடப்பது அவசியமாகும். மார்க்கத்தை குத்தகைக்கு எடுத்துள்ளவர்கள் அறிவிக்கின்றனர். எவர் நாம் கூறியதற்கேற்ப செயல்படுவதில்லையோ அல்லது எம்மைப் பின்பற்றுவதில்லையோ அவர் அல்லாஹ்வால் விரட்டப்பட்டவர் ஆவார் என்றும், அவர் நரகவாசி ஆவார் என்றும் கூறி தம் மக்களுக்கு அஹ்மதிகளுடன் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளுங்கள் என்று முழு சுதந்திரம் வழங்கியுள்ளனர். எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளுங்கள். உங்களை கேட்பவர் யாரும் கிடையாது என்று கூறுகின்றனர். இதுவே நடந்து கொண்டிருக்கிறது. அதாவது சட்டம் ஓங்க வேண்டும் என்று அரசு வாதம் புரிகிறது. அஹ்மதிகளின் மீது அநீதியிழைத்தால் எதுவும் செய்யாமல் இருப்பது மட்டுமின்றி அநீதியிழைத்தவர்களுக்கு ஆதரவும் அளித்து வருகிறது.

இப்போது இரண்டு நாட்களுக்கு முன் ஓர் அஹ்மதியை கராச்சியில் சஹீதாக்கியுள்ளனர். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். ஜிஹ்லம் என்ற இடத்திலும் ஓர் அஹ்மதியை கொலை செய்யும் நோக்கத்துடன் தாக்குதல் நடத்தியுள்ளனர். அவர் படுகாயம் அடைந்து இப்போது மருத்துவமனையில் உள்ளார். அல்லாஹுத்தஆலா அவர்களுக்கு நல்ல உடல் நலத்தையும் விரைவான ஷிஃபாவையும் வழங்குவானாக! ஜமாஅத்தைச் சேராத நபர்கள் சிலர் அஹ்மதிகளுக்கு நண்பர்களாக உள்ளனர். அவர்களும் பாவம் இந்த அநியாயத்தால் பாதிக்கப்படுகின்றனர். கராச்சியில் நடந்த சஹாதத் சம்பவத்தில், அஹ்மதியுடன் இரண்டு அஹ்மதி அல்லாத நண்பர்களும் காரில் இருந்தனர். அவர்களும் படுகாயம் அடைந்துள்ளனர். அல்லாஹுத்தஆலா அவர்களுக்கும் உடல் ஆரோக்கியத்தை வழங்குவானாக! இவர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலை மிகவும் மோசமாக உள்ளது.

அல்லாஹ் கூறுகிறான்: இது ஒன்றும் புதிய விசயமல்ல. இதற்கு முன்னரும் மார்க்கத்தை குத்தகைக்கு எடுத்த நபர்கள் இப்படித்தான் கூறி வந்தனர். ஆனால் அல்லாஹுத்தஆலா இவ்வாறு அறிவிப்பு செய்கின்றான். எவர் ஒருவர் தன்னை முழுமையாக இறைவனின் விருப்பத்தின் கீழ் கொண்டு வந்து கருணை காட்டுபவராக இருப்பாரோ அவருடைய நற்கூலி அவருடைய இறைவனிடம் உள்ளது.

அஹ்மதி அல்லாத ஒரு நண்பர் கராச்சியிலும் படுகாயம் அடைந்துள்ளார். இன்னொருவர் ஜிஹ்லமின் சராயே ஆலம் கீர் என்ற இடத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவருடைய நிலை முன்பை விட அல்லாஹ்வின் அருளால் சற்று தேறியுள்ளது. அல்லாஹுத்தஆலா இவர்களுக்கு ஷிஃபா வழங்குவானாக!

நான் கூறி வந்த கருத்து என்னவென்றால், எவர் தன்னை முழுமையாக இறை விருப்பத்தின் கீழ் அர்ப்பணித்து விட்டு, கருணை காட்டுபவராகவும் இருப்பாரோ அவருடைய நற்கூலி அவருடைய இறைவனிடம் உள்ளது. சொர்க்கம் அல்லது நரகத்திற்குச் செல்லும் சான்றிதழை மார்க்கத்தின் பெயரால் இரத்தம் சிந்தக் கூடியவர்கள் வழங்கக் கூடாது அல்லது வேறு யாரும் வழங்கக் கூடாது அல்லது எந்தவொரு நாட்டின் பாராளுமன்றமும் இந்த சான்றிதழை வழங்கக் கூடாது. அல்லாஹுத்தஆலா உள்ளங்களின் நிலைகளை நன்கு அறிகின்றான். அவன் அறிவிக்கின்றான். யார் நல்ல செயல்களை இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக செய்வாரோ, மேலும் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்வாரோ மேலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளை உள்ளது என்பதற்காக பைஅத் செய்வாரோ அப்படிப்பட்ட மனிதன் அஞ்ச வேண்டிய அவசியமும் இல்லை. கவலையடையவும் தேவையில்லை.

அல்லாஹுத்தஆலாவின் விருப்பத்தைப் பெறுவதற்காக அவனது போதனையின்படி செய்யப்பட்ட ஒவ்வொரு செயலும் மனிதனை அவனை இறைவனின் விருப்பத்தைப் பெறுபவனாக ஆக்கும். எனவே அல்லாஹுத்தஆலா மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த ஒவ்வொரு அஹ்மதியும் நிச்சயமாக அல்லாஹ்வின் கட்டளையைப் பேணி நடப்பவர் ஆவார். அவர் உண்மையான முஸ்லிம் ஆவார். அவர் அல்லாஹுத்தஆலாவின் நேசத்தைப் பெறுபவர் ஆவார். அவர் முஸ்லிம் என்பதற்கு எந்தவொரு நாடும் அல்லது நாட்டின் பாராளுமன்றமும் அச்சு பதிக்க வேண்டிய அவசியமில்லை. அல்லாஹ்வின் பார்வையில் முஸ்லிம் எனப்பட்டவர் நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்திற்கேற்ப இவ்வாறு அறிவிப்பு செய்ய வேண்டும். அதாவது நான் முஸ்லிம் ஆவேன் என்று கூற வேண்டும்.

அல்லாஹுத்தஆலா கூறுகிறான்: *மன் அஸ்லம வஜ்ஹஹுஹு லில்லாஹ்* எவர் ஒருவர் தன் எல்லா கவனத்தையும் அல்லாஹ்வின் பக்கம் திருப்பியவாறு நான் முஸ்லிம் ஆவேன் என்று அறிவிக்கிறாரோ அப்படிப்பட்ட மக்கள் முஸ்லிம் ஆவர். இங்கு நீர் முஸ்லிமா? இல்லையா? என்று வேறு ஒருவர் அறிவிக்க வேண்டும் என்று இறைவன் கூறவில்லை. மாறாக ஒவ்வொரு தனி நபரும் தன்னை அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிந்தவராக ஆக்கி பிறகு நான் எனது முழு விருப்பத்துடன் முஸ்லிம் ஆவேன் என்று அறிவிக்கிறேன் என்று கூறி முஸ்லிம் என்ற அடிப்படையில் இறைவன் என் மீது சுமத்திய பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று அறிவிக்க வேண்டும். இது வெறும் வாதமல்ல. மாறாக இறைவன் கூறுகிறான்: *வஹுவ முஹ்ஸினுன்* அவர் கருணை காட்டுபவராகவும் இருக்க வேண்டும். அவர் இறைவன் கூறிய அனைத்து செயல்களையும் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டும். இறைவனின் கட்டளைகளின்படி செயல்பட வேண்டும். மேலும் என்னென்ன தீமைகளை இறைவன் தடுத்துள்ளானோ அவற்றிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். இதுவே இறைவன் சுமத்திய பொறுப்பை சுமப்பதாகும். இவ்வாறான மனிதர் மீது இறைவனின் அன்பின் பார்வை படும். நீங்கள் இவ்வாறு இருக்கிறீர்கள் என்றால் உங்களுக்கு எந்த விதமான அச்சமும் கவலையும் இருக்கக் கூடாது என்று இறைவன் கூறுகிறான். நல்ல செயல்கள் கடந்த பாவங்களுக்கு பாவமன்னிப்பிற்கு காரணமாக அமையும். மேலும் தொடர்ந்து இடைவிடாது செய்யப்படும் நல்ல செயல்கள் தீமையை விட்டு தவிர்ந்திருப்பது மற்றும் உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குவது ஆகியவை வருங்கால தவறுகளிலிருந்தும் மனிதனை பாதுகாக்கும். இவை அச்சம் மற்றும் கவலை ஆகியவற்றிலிருந்து விலக்கி வைக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதை விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அரபி மொழியில் இஸ்லாம் என்பது ஒரு பொருளுக்கு உரிய விலையை முன் பணமாக செலுத்துதல் அல்லது ஒருவரிடம் தம் பணிகளை ஒப்படைத்தல் அல்லது சமாதானத்தை வேண்டுதல் அல்லது சண்டை சச்சரவை கை விடுதல் என்று பொருளாகும்.

அதாவது இஸ்லாம் என்பதற்கு நான்கு பொருள்கள் உள்ளன. ஒரு பொருளுக்குரிய விலையை முன் பணமாக செலுத்துதல், ஒருவரிடம் தம் பணியை ஒப்படைத்தல், சமாதானம் ஏற்படுத்த முயற்சி செய்தல் மற்றும் எல்லா விதமான சண்டை சச்சரவுகளையும் விட்டு விடுதல் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இஸ்லாத்தின் நுட்பமான பொருள் இந்த திருக்குர்ஆன் வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

بَلَىٰ مَنْ أَسْلَمَ وَجْهَهُ لِلَّهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهُ أَجْرُهُ عِندَ رَبِّهِ
وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

அதாவது, முஸ்லிம் என்பவர், இறைவனின் வழியில் தனது எல்லா இருப்பையும் அர்ப்பணிப்பவரே ஆவார். அதாவது தன்னை அல்லாஹ்வுக்காகவும் அவனது விருப்பத்தைப் பின்பற்றுவதற்காகவும், அவனது மகிழ்வைப் பெறுவதற்காகவும் முற்றிலுமாக அர்ப்பணித்து விட வேண்டும். பிறகு இறைவனுக்காக நல்ல செயல்களில் நிலைத்திருக்க வேண்டும். மேலும் தன் நிலையின் எல்லா செயல்பூர்வமான சக்திகளையும் அவனது வழியில் அர்ப்பணித்து விட வேண்டும். இதன் பொருள் யாதெனில் கொள்கை அடிப்படையிலும் செயல் அடிப்படையிலும் இறைவனுக்காக மட்டுமே அவன் ஆகி விட வேண்டும்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

கொள்கை அடிப்படையில் அவனுக்காக ஆகி விடுதல் என்பது தன்னை, முழுவதுமாக இறைவனை கண்டு கொள்தல், அவனுக்கு கீழ்படிதல் அவனது நேசம், அன்பு மற்றும் அவனது விருப்பம் ஆகியவற்றைப் பெறுவதற்காக படைக்கப்பட்ட ஒரு பொருள் என்று நம்ப வேண்டும்.

செயல்பூர்வமாக அவனுக்கு அர்ப்பணமாகி விடுதல் என்பது, தூய்மையான முறையில் உண்மையான நன்மைகள் அவை ஒவ்வொரு சக்தியைச் சார்ந்ததும் இறைவனின் ஒவ்வொரு தவ்ஃபீக்கையும் சார்ந்ததுமான

நன்மைகளைச் செய்ய வேண்டும். அவற்றை மிகவும் ஆர்வத்தோடும், ஆசையோடும் செய்ய வேண்டும். அது கட்டுப்படுதலின் கண்ணாடியில் உண்மையான இறைவனின் முகத்தைப் பார்ப்பது போல் செய்கையில் அமைந்திருக்க வேண்டும்.

இந்த நிலையைத்தான் நாம் கொள்கை அடிப்படையிலும், செயல் அடிப்படையிலும் பெற வேண்டும். நாம் நம்மை சீர்திருத்துகிறோம் என்றால், நாம் நமது ஈமானில் உறுதியாக இருக்கிறோம் என்றால், நாம் நமது செயல்களின் மீது கவனம் உள்ளவர்களாக இருக்கிறோம் என்றால், நமது செயல்கள் யாவும் இறைவனின் விருப்பத்தின்படி அமைந்துள்ளனவா? இல்லையா? என்று கவனிப்பவர்களாக இருக்கிறோம் என்றால், அவற்றை இறைவனின் விருப்பத்தின்படி அமைத்திட முயற்சி செய்கிறோம் என்றால், துஆவில் அதிக ஈடுபாட்டுடன் இருக்கிறோம் என்றால் உலக வாதிகளின் உலக சட்டங்கள் அல்லது சட்டங்களின் பின்னணியில் அநீதி ஆகியவை நமக்கு இவ்வுலக வாழ்வில் ஒருவேளை வெளிப்படையாக சற்று இழப்பை ஏற்படுத்தலாம். ஆனால் நாம் இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப்படுவோம். திருக்குர்ஆன் அநீதியிழைப்பவர்களின் உதாரணத்தை நமக்கு எடுத்துக் காட்டி முன்னதாகவே நமது உள்ளங்களை உறுதிப்படுத்தி விட்டது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் முதலில் மந்திரவாதியாக வந்தனர். பின்னர் அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அவர்கள் கூறிய பதில் فَاقْضِ مَا أَنتَ قَاضٍ ۖ إِنَّمَا تَقْضِي هَٰذِهِ الْحَيَاةَ الدُّنْيَا

*உன்னால் இயன்றதைச் செய்து கொள். உன்னால் இவ்வுலக வாழ்க்கையைக் குறித்தே தீர்ப்பு வழங்க முடியும். (20:73)*

அதாவது நீ இவ்வுலக வாழ்க்கையைப் பற்றி மட்டுமே தீர்ப்பு வழங்க முடியும். இவ்வுலக வாழ்க்கையைத் தான் முடிக்க முடியும். எனவே எந்த அரசாங்கமும் அநீதியிழைக்க விரும்பினால் அவர்கள் முன்னிலையில் மூஃமின்களின் முடிவும் உள்ளது. ஃபிர்அவ்ன்களின் முடிவும் உள்ளது. இறுதி வெற்றி அல்லாஹுத்தஆலாவின் அருளால் மூஃமின்களுக்கே கிடைக்கிறது. இங்கும் இன்சா அல்லாஹ் அவ்வாறே வெற்றி கிடைக்கும்.

உலக மக்களைக் கண்டு அஞ்சாமல் இருக்கின்ற உறுதியான ஈமானை நாம் வெளிப்படுத்த வேண்டும். அச்சமும் கவலையும் இருக்கிறது என்றால் அல்லாஹுத்தஆலாவின் விருப்பத்தை எவ்வாறு பெறுவது? அவனது நெருக்கத்தை எவ்வாறு பெறுவது? என்ற கவலை மட்டுமே இருக்க வேண்டும்.

முஸ்லிம் என்று தம்மை பிரகடணப்படுத்தும் மக்கள் மற்றும் ஈமானுக்கு ஏற்ற நல்ல செயல்களைச் செய்யக் கூடிய மக்களின் தரத்தை இறைவன் எடுத்துக் கூறியுள்ளான். சூரா நிஸாவின் இந்த வசனத்தில் கூறுகிறான்:

وَمَنْ أَحْسَنُ دِينًا مِّمَّنْ أَسْلَمَ وَجْهَهُ لِلَّهِ وَهُوَ مُحْسِنٌ وَاتَّبَعَ مِلَّةَ إِبْرَاهِيمَ حَنِيفًا ۗ
وَاتَّخَذَ اللَّهُ إِبْرَاهِيمَ خَلِيلًا

*அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிந்து, நன்மை செய்பவராகி, இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுபவரை விட அழகான மார்க்கத்தை உடையவர் யார்? அல்லாஹ் இப்ராஹீமை தன் நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொண்டான். (4:126)*

எனவே இப்ராஹீமின் மார்க்கத்தைப் பின்பற்றுவது அவசியமாகும். அல்லாஹுத்தஆலாவின் நண்பன் ஆக வேண்டுமென்றால் இது அவசியமாகும். மில்லத் என்ற சொல்லுக்கு பல பொருள்கள் உள்ளன. ஒன்று, வழி, பாதை என்பதாகும். மதம் என்பதும் இதன் பொருளாகும். இதன்படி அல்லாஹுத்தஆலா ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சிறப்புகளைக் கூறும் போது

وَإِبْرَاهِيمَ الَّذِي وَفَّىٰ என்று கூறுகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழி இதுவாகும். அவனது பாதையில் சத்தியத்தை மேற்கொள்ள வேண்டும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் பெற்ற நெருக்கத்திற்குக் காரணம் இதுவாகும். அல்லாஹ் கூறுகிறான்: *வ இப்ராஹீமல்லஸீ வஃப்பா* அதாவது இப்ராஹீம் விசுவாசம் காட்டியவர் ஆவார்.

இறைவனுடன் விசுவாசம், சத்தியம், தூய்மை ஆகியவற்றை மேற்கொள்வது ஒரு மரணத்தை வேண்டுகின்றது. மனிதன் இவ்வுலக இச்சைகள் மற்றும் பெருமிதங்களின் மீது தண்ணீர் தெளித்து விட்டு எல்லா இழிவு மற்றும் கடினம் ஆகியவற்றை இறைவனுக்காகப் பொருத்துக் கொள்ளத் தயாராகாத வரை இந்த நற்குணங்கள் உருவாகாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

மனிதன் தூய்மையான முறையில் இறைவனுக்காக அர்ப்பணமாகி விடாத வரை, அவனது வழியில் எல்லா துன்பங்களையும் தாங்கிக் கொள்ளாத வரை உண்மை மற்றும் தூய்மையின் சாயல் உருவாவது கடினமாகும். அல்லாஹுத்தஆலா செயல்களை விரும்புகின்றான். அவன் செயல் மூலமே திருப்தி அடைகின்றான். அப்படிப்பட்ட செயல் துன்பத்தால் விளைகிறது. ஆனால் மனிதன் இறைவனுக்காக துன்பத்தை சகித்துக் கொள்ள தயாராகும் போது இறைவன் அவரை துன்பத்தில் ஆழ்த்தமாட்டான்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் அல்லாத ஏணையவற்றிலிருந்து உள்ளத்தை தூய்மையாக்கி, இறை நேசத்தைக் கொண்டு நிரப்பி, இறை விருப்பத்திற்கேற்ப செயல்பட்டு, நிழல் அதன் அசல் பொருளுக்கு முற்றிலும் கீழ்படிந்து இருப்பதைப் போல் அந்த மனிதனின் விருப்பமும் இறைவனின் விருப்பமும் ஒன்றாக இருக்க வேண்டும். அவற்றிற்கிடையே வேறுபாடு இருக்கக் கூடாது. இவ்வனைத்தும் துஆவின் மூலம் கிடைக்கிறது. இவ்வனைத்தும் இப்ராஹீம் (அலை) அவர்களின் சிறப்பம்சமாகும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இஸ்லாத்தின் உண்மைத்துவம் ஒருவர் தன் எல்லாவற்றையும், வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான சக்திகள் அனைத்தையும் இறைவனுக்காகவும் அவனது வழியிலும் அர்ப்பணமாக்கி விடும் போது தான் தெளிவாக புரியும். மேலும் இறைவன் புறமிருந்து அவனுக்கு கிடைத்த எல்லா அமானிதங்களையும் திரும்ப அவனிடமே உண்மையான முத்துக்களைப் போல் ஒப்படைக்க வேண்டும். கொள்கை அடிப்படையில் மட்டுமல்லாது செயல் பூர்வமாகவும் அவனது கண்ணாடியில் இஸ்லாம் மற்றும் அதன் எல்லா வடிவமும் காட்டப்பட வேண்டும்.

அதாவது தான் ஒரு முஸ்லிம் என்று பிரகடணப்படுத்தும் நபர் தன் கை, கால்கள், உள்ளம், மூளை, அவரது அறிவு மற்றும் புரிகின்ற திறன், அவருடைய கோபம் மற்றும் கருணை, அவருடைய பொறுத்துக் கொள்ளும் தன்மை மற்றும் அவரது அறிவு, அவரது எல்லா ஆன்மீக மற்றும் பௌதீக திறன் மற்றும் சக்திகள், அவரது கண்ணியம் மற்றும் செல்வங்கள் அவரது ஓய்வு மற்றும் மகிழ்ச்சி இன்னும் அவரது உச்சி முடி முதல் கால் நகம் வரை வெளிப்படையாகவும் அந்தரங்கமாகவும் உள்ள அனைத்தும் அவரது எண்ணங்களும் அவரது உள்ளத்தின் அச்சங்கள் உட்பட அவரது மன உணர்ச்சிகள் ஆகிய அனைத்தும் இறைவனுக்கு கீழ்ப்படிந்திட வேண்டும். எவ்வாறு ஒரு மனிதனின் உறுப்புகள் அவரது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளனவோ அவ்வாறே இவை அனைத்தும் இறைவனின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட வேண்டும். சத்தியத்தின் நடை இந்த அளவுக்கு ஆகி விட வேண்டும். இனி அவரிடம் உள்ளவை யாவும் அவருடையது அல்ல. அவை அனைத்தும் இறைவனுடையதாகி விட்டது என்று நிரூபணம் ஆகி விட வேண்டும். எல்லா உறுப்புகளும், எல்லா சக்திகளும் இறை தொண்டில் முற்றிலும் தன்னை மாய்த்துக் கொண்டவாறு ஈடுபட வேண்டும்.

இந்த தரத்தையே ஒவ்வொரு அஹ்மதியும் அடைய முயற்சி செய்ய வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் இதை அடைய முயற்சி செய்வது அவசியமாகும். இந்த தரத்தை நாம் அடைய முயற்சி செய்யும் போது தான் நாம் உண்மையான முஸ்லிம் என்று பிரகடணம் செய்ய முடியும். அப்போது தான் நாம் இறைவனின் பாதுகாவலில் வரக்கூடியவர்களாக இருப்போம். ஜமாஅத் என்ற அடிப்படையில் நம்மில் பெரும்பான்மையினர் இந்த தரத்தை அடைபவர்களாக இறைவன் ஆக்குவானாக! துஆவின் பக்கம் கவனம் செலுத்துபவர்களாகவும் நாம் உண்மையில் இஸ்லாத்தின் சாயலை மேற்கொள்பவர்களாகவும் இருப்போமாக! பிறகு இறைவனின்

அருட்கொடைகளை நாம் ஈர்த்தவாறு *புஸ்ரா லில் முஸ்லிமீன் - கட்டுப்பட்டு நடப்பவர்களுக்கு நற்செய்தி உண்டு (16:90)* என்று கூறிய மக்களில் நாம் சேர வேண்டும். அதாவது கட்டுப்படுவதற்காக தூய முறையில் இஸ்லாத்தின் கட்டளைகளின்படி செயல்படுபவர்களுக்கு நற்செய்தி உள்ளது. அல்லாஹ்வின் புறமிருந்து நற்செய்தி கிடைக்கும் போது எதிரிகள் வேரறுக்கப்படுவதும் முடிவுக்கு வருவதுமான காட்சிகளும் நமக்குத் தென்படுகின்றன. நம்மில் பலருக்கு துஆக்களின் பக்கம் கவனம் ஏற்படும்படி அல்லாஹ் ஆக்குவானாக! எல்லா அஹ்மதிகளுக்கும் துஆவின் பால் கவனம் ஏற்படட்டுமாக! அல்லாஹ்வுடன் சிறப்பான தொடர்பு ஏற்படட்டுமாக! விரைவில் நாம் எதிரிகளின் தீய முடிவைப் பார்க்கக் கூடியவர்களாக இருப்போமாக!

நான் ஏற்கனவே கூறினேன். கராச்சியில் ஓர் அஹ்மதி சஹீதாக்கப்பட்டுள்ளார். அவரைப் பற்றிய விபரங்களை எடுத்துக் கூறுகின்றேன். இன்சா அல்லாஹ் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவருடைய ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். இவரது பெயர் மதிப்பிற்குரிய சவுத்ரி ஹாமிது ஸமீ சாஹிப். மர்ஹூம் சவுத்ரி அப்துஸ் ஸமீ காதிம் சாஹிப் அவர்களது மகன் ஆவார். இவர் கராச்சியில் குல்சனே இக்பால் என்ற இடத்தில் வசித்து வந்தார். ஜுன் 11 ஆம் தேதி இவர் சஹீதாவியுள்ளார். இவரது குடும்பத்திற்கு இவரது பாட்டனார் மதிப்பிற்குரிய சவுத்ரி அப்துர் ரஹீம் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. இவருடைய பாட்டனார் குர்தாஸ்பூர் இந்தியாவைச் சேர்ந்தவர். இவருடைய பாட்டி மதிப்பிற்குரிய சர்தார் பேகம் சாஹிபா. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி மதிப்பிற்குரிய சவுத்ரி முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்களின் மகள் ஆவார். இவரது பாட்டனார் சவுத்ரி அப்துர் ரஹீம் சாஹிப் 1924 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். பைஅத்திற்குப் பிறகு இவர் தம் பெற்றோரின் கடும் எதிர்ப்பை சந்திக்க வேண்டியது வந்தது.

எனவே இந்த எதிர்ப்பு இன்று முதல் ஆரம்பமான ஒன்றல்ல. இது எப்போதும் இருந்து வரும் ஒன்றாகும். இவரது பாட்டனாருக்கு அவருடைய தந்தை கடுமையான தண்டனை கொடுத்தார். அவருடைய உள்ளங்கையில் கட்டிலை வைத்து கட்டி அதன் மீது ஏறி தூங்குவார். இவ்வாறு இவருடைய பாட்டனார் இரவு முழுவதும் கை கட்டப்பட்ட நிலையிலேயே இருப்பார். இதன் காரணமாக இவரது உள்ளங்கையில் தளும்பும் ஏற்பட்டு விட்டது. பிறகு 1929 ஆம் ஆண்டு இவர்கள் லாஹுருக்கு இடம்பெயர்ந்து அங்கேயே தங்கினார்கள். ஹாமித் ஸமீ சாஹிப் லாஹுரில் தான் பிறந்தார்கள். இவருடைய கல்வித் தகுதி Charted Accountant (CA) ஆகும். இவரது தந்தையாரும் Charted Accountant ஆவார். இவருக்கு பண்ணை ஒன்று இருந்தது. அதை இவர்கள் கவனித்து வந்தார்கள். சஹாதத்தின் போது இவரது வயது 48 ஆகும். அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்திருந்தார்.

அஸர் தொழுகைக்குப் பிறகு ஏறக்குறைய 6.30 மணி அளவில் தமது பண்ணையிலிருந்து கராச்சியின் ஜின்னாஹ் சாலையில் காரில் சென்று கொண்டிருந்தார். ஜமாஅத்தைச் சேராத இரண்டு நண்பர்களும் இவருடன் காரில் அமர்ந்திருந்தனர். இவர்கள் தம் அலுவலகத்திலிருந்து சற்று தூரம் சென்றதும் அடையாளம் தெரியாத நபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து இவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். காயமுற்றிருப்பதைப் பார்க்கும் போது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்து காரின் இரண்டு புறமிருந்தும் இவர்கள் துப்பாக்கியால் சுட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது. இவருடைய நெற்றியில் ஆறு தோட்டாக்கள் பட்டன. பிறகு இடுப்பு மற்றும் முகத்தில் பாய்ந்துள்ளது. இதனால் இவர் சம்பவ இடத்திலேயே சஹீதாகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவருடன் இருந்த இரண்டு நண்பர்களும் காயமடைந்துள்ளனர். ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. அல்லாஹுத்தஆலா இவர்கள் மீதும் கருணை காட்டுவானாக! காயமடைந்து இரண்டு நபர்களுக்கும் நேரடியாக குண்டுகள் பலவில்லை என்றே தெரிகிறது. இவர் மீது பாய்ந்த தோட்டாக்கள் இவரது உடலிலிருந்து ஊடுருவி மற்ற இரண்டு நபர்களின் மீது பட்டு காயமடைந்துள்ளனர்.

சஹீத் மர்ஹூம் தமது ஹல்காவில் செகரட்டரி மால் ஆக இருந்தார். இது தவிர இவர் முதலில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பொருளாளராக இருந்தார். பின்னர் அன்ஸாருல்லாஹ்வின் சந்தா பிரிவில் பணியாற்றினார். இவர் மிகவும் நல்லிலய்பு கொண்டவர் ஆவார். நல்லொழுக்கம் கொண்டவர் ஆவார். எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பவர் ஆவார். மிகவும் அதிக அன்பு செலுத்துபவர் ஆவார். இவர் தன் மனைவி மற்றும் மக்களை மிகவும் நேசிப்பவர் ஆவார். பிற மக்களிடமும் பரிவுடன் நடந்து கொள்பவர் ஆவார்.

**இவருடைய ஹல்காவின் சதர் சாஹிப் கூறுகின்றார்:**

சஹீத் மர்ஹூம் மிகவும் கீழ்ப்படியும் குணமுடையவர் ஆவார். நான் மே மாதமே சந்தாவை பூர்த்தி செய்யுமாறு கூறினேன். உடனே அவர் முழுமையாக செலுத்தி விட்டார். இவர் ஜூன் 11 அதாவது சஹாதத்திற்கு ஒரு நாள் முன்பு வஸிய்த் செய்தவர்களுக்கான ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மிகவும் சிறந்த முறையில் வஸிய்யத்தின் முக்கியத்துவம் மற்றும் சந்தாவைப் பற்றி சிறந்த முறையில் உரையாற்றினார். இவர் சொற்பொழிவு நிகழ்த்துபவர் ஆவார். Internship செய்வதற்காக அஹ்மதிகளுக்கு உதவி செய்து வந்தார். இவருடைய மனைவி சபா ஹாமித் சாஹிபா ஆவார். இவருக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். மூத்த மகள் மூஸா ஹாமித் சாஹிபா. 14 வயது ஆகிறது. இரண்டாவது மகள் பாரியா ஹாமித் சாஹிபா. வயது 7 ஆகிறது. மகன் ராஸிக் அஹ்மது 9 வயது ஆகிறது. அல்லாஹுத்தஆலா இவர்களுக்கு பொறுமையும் மன தைரியத்தையும் வழங்குவானாக! இவர்களுக்கு இறைவன் பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக! இவரது இன்னும் சில சகோதரர்களும் சகோதரிகளும் பாகிஸ்தானுக்கு வெளியில் வசிக்கின்றனர். அல்லாஹுத்தஆலா இவரது தர்ஜாக்களை உயர்த்துவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **14.06.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456